சுருக்கம்

பொதுப்பணிகள் – வருவாய்த்துறை – நேரடி நியமன உதவியாளர்கள் – மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பயிற்சி – மாவட்ட வருவாய் அலகின் கட்டுப்பாட்டிலுள்ள ஏதேனும் ஒரு அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்த காலத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் – தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிக்கு திருத்தம் வெளியிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய்(பணி6(1)) துறை

அரசாணை ( நிலை) எண்.93 — நாள்: 20.02.2015
ஜய வருடம், மாசி 8,
திருவள்ளுவர் ஆண்டு 2046.

படிக்கப்பட்டன:

1) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மனு நாள் 15.08.2014.
2) தமிழ்நாடு வருவாய்த்துறை (குரூப்.II) நேரடி நியமன அலுவலர்கள் சங்கத்தின் மனு நாள் 10.10.2014.
3) கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ந.க.பணி4(2)/ 40160/2014, நாள் 30.12.2014.

--------

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த சார்நிலைப்பணி தேர்வு–1 (TNPSC Group-II) மூலம் நேரடியாக பணி நியமனம் செய்யப்பட்ட உதவியாளர்கள் ஒரே நேரத்தில் ஏராளமானவர்கள் பணி நியமனம் செய்யப் பெற்றிருப்பதால் 5 ஆண்டுகளில் மேற்சொன்ன பயிற்சி முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பவானிசாகர் பயிற்சி, நிலஅளவைப் பயிற்சி, மூன்றாண்டுகள் ஏதேனும் ஒரு அலுவலகத்தில் உதவியாளர் மற்றும் இரண்டாண்டு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணி முடித்திருப்பின் அவர்களை துணை வட்டாட்சியர் பதவி உயர்விற்கு தகுதி பெற்றவராக அறிவிக்க வேண்டும் என்று மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கோரிக்கை மனுவில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தினரும், துணை வட்டாட்சியர் பதவி உயர்வு பெற ஓர் ஆண்டு வருவாய் ஆய்வாளர் பயிற்சி முடித்து இதரப் பணிக்காலத்தினை எந்த அலுவலகத்திலும் முடிக்கலாம் என ஆணையிடுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கோரிக்கை மனுவில் தமிழ்நாடு வருவாய்த்துறை (குரூப்.II) நேரடி நியமன அலுவலர்கள் சங்கத்தினரும் கோரியுள்ளனர்.

2. மேற்படி சங்கத்தினர்களின் கோரிக்கை, தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 38(b)(ii) இணைப்பு–9 ஆகியவை பரிசீலிக்கப்பட்டது என்றும், தற்போது புதியதாக பணியேற்றுள்ள நேரடி நியமன உதவியாளர்கள் அனைவருக்கும் ஒரே சமயத்தில் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 38(b)(ii) இணைப்பு–9–ல் பத்தி 8–ல் வரிசை எண்.(v)–இல் தெரிவித்துள்ளவாறு ஓராண்டு எட்டு மாதங்கள் வருவாய் உதவியாளர் பணியினை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வரிசைப்படி ஐந்து ஆண்டு காலத்திற்குள் பயிற்சியை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது என்றும், ஆகையால், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பணிபுரியும் நேரடி நியமன உதவியாளர்களைத் தவிர, இதர நேரடி நியமன உதவியாளர்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலகினைச் சார்ந்த இதர அலுவலகங்களிலும் பணிபுரியும் நிலை தவிர்க்க இயலாததாக உள்ளது என்றும், இதனைக் கருத்தில் கொண்டு

...2...

தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 38(b) (ii) இணைப்பு–9–ஐ பரிசீலித்ததில், மேற்காணும் விதிகளில் தெரிவித்துள்ளவாறு பத்தி எண்.8–ல் உள்ள வரிசை எண்.(i) முதல் (iv) வரை குறிப்பிடப்பட்டுள்ளவைகள் அனைத்தும் உதவியாளர் நிலையில் பணிமுடித்திடத் தேவையான முக்கிய பணிகளாகும் என்றும், இதில் எவ்வித மாற்றமும் செய்ய இயலாது என்றும், இதில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி, வருவாய் ஆய்வாளர் காலம் மற்றும் வட்ட அலுவலக பயிற்சி முடிக்கும் பட்சத்தில்தான் அடுத்த பதவி உயர்வுக்கு முழு தகுதி பெற முடியும் என்றும், எனவே, நேரடி நியமன உதவியாளர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஓராண்டு எட்டு மாதங்கள் உதவியாளர் நிலையில் பணிபுரிய வேண்டும் என்பதற்குப் பதிலாக மாவட்ட வருவாய் அலகின் கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் ஒரு அலுவலகத்தில் வருவாய் உதவியாளர் நிலையில் பணிபுரிய வேண்டும் என தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 38(b)(ii) இணைப்பு–9–ன் பத்தி 8–ல் வரிசை எண்.(v)-க்கு திருத்தம் மேற்கொள்ளலாம் என மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் மற்றும் தமிழ்நாடு வருவாய்த்துறை (குரூப்.II) நேரடி நியமன அலுவலர்கள் சங்கம் ஆகியவற்றின் கோரிக்கைகள் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையில் அரசு நன்கு ஆய்வு செய்தது. தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 38(b)(ii) இணைப்பு–9–ன் பத்தி 8–ல் வரிசை எண்.(v)-இன்படி நேரடி நியமன உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்படுபவர் ஐந்தாண்டு பயிற்சிக்காலத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஓராண்டு எட்டு மாதங்கள் பணிபுரிய வேண்டும் என்ற நிபந்தனைக்குப் பதிலாக "மாவட்ட ஆட்சியர் அலுவலகம்" (அல்லது) வருவாய்த்துறையில், மாவட்ட வருவாய் அலகிலுள்ள ஏதேனும் ஒரு அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிய வேண்டும் என்கிற வகையில் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 38(b)(ii) இணைப்பு–9–ன் பத்தி 8–ல் வரிசை எண்.(v)-க்கு தக்க திருத்தம் வெளியிடலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் உள்ள ஆணைக்கிணங்க உரிய விதித்திருத்தம் வெளியிடுவதற்கு ஏதுவாக தக்க செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,சேப்பாக்கம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
நகல்
மாநிலத் தலைவர், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்,
12, கிருஷ்ணப்பா தெரு, சேப்பாக்கம், சென்னை–5.
மாநிலத் தலைவர், தமிழ்நாடு வருவாய்த்துறை (குரூப்–II),நேரடி நியமன அலுவலர் சங்கம்,
3/36, பேங்க் காலனி முதல் தெரு, நாராயணபுரம், மதுரை.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
வருவாய்த்(பொது.II)துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

23.2.15
பிரிவு அலுவலர்.

23/2/15